வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவணக்குமார்

தேதி 03.05.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா வந்துள்ள அங்கோலா அதிபர் திரு ஜோவா மானுவல் கோன்சால்வ்ஸ் லூரென்கோ-வை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வரவேற்றனர்.
- மும்பையில் நடைபெற்று வரும் வேவ்ஸ் உச்சிமாநாட்டின் 3 ஆம் நாளான இன்று சமுதாய வானொலி தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது.
- பாகிஸ்தானில் இருந்து நேரடி மற்றும் மறைமுக இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.
- புதுச்சேரியில் தொழில்துறை வளர்ச்சி குறித்த ஆலோசனை கூட்டம் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமையில் ராஜ்நிவாசில் இன்று நடைபெற்றது.

<u>*அங்கோலா அதிபர்* (13)</u>

இந்தியா வந்துள்ள அங்கோலா அதிபர் திரு ஜோவா மானுவல் கோன்சால்வ்ஸ் லூரென்கோ-வுக்கு புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனின் முன் வளாகத்தில் இன்று காலை சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் அவரை வரவேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அங்கோலா அதிபர் திரு லூரன்கோ, இந்திய மக்களின் அன்பான வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கு தனது தூதுக்குழுவின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

தொடர்ந்து, ராஜகாட்டில் உள்ள தேச பிதா மகாத்மா காந்தி நினைவிடத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து, பிற்பகல் பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து, பல்வேறு துறைகளில் இருதரப்பை ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அப்போது, இருநாடுகளுக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

<u>வேவ்ஸ் (3)</u>

மும்பையில் நடைபெற்று வரும் வேவ்ஸ் உச்சிமாநாட்டின் 3 ஆம் நாளான இன்று சமுதாய வானொலி தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது.

*<u>வேவ்ஸ் வாய்ஸ் (19)</u>*

<u>வேவ்ஸ் உச்சிமாநாட்டின் 3 ஆம் நாளான இன்று சமுதாய வானொலி தொடர்பான கருத்தரங்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிறப்பாக செயல்பட்ட சமுதாய வானொலிகளுக்கு விருதுகளை வழங்கி கவுரவித்த டாக்டர் எல் முருகன், கலாச்சாரத்தையும், உள்ளூர் மேம்பாட்டையும் இந்த சமுதாய வானொலிகள் முன்னெடுத்து செல்வதாக கூறினார். 7 சர்வதேச நிறுவனங்கள் இந்திய படைப்பாற்றல் தொழில்நுட்ப மையத்துடன் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளதாக அவர் தெரிவித்தார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஊடக பொழுதுபோக்கு துறையின் பங்களிப்பு குறித்த கையேட்டையும் அவர் வெளியிட்டார். முன்னதாக, மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. நாளை வரை நடைபெற உள்ள இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகள் அனைத்தும் சிறப்பாக இருந்ததாகவும், இது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். 77</u>

நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்று வரும் இந்த வேவ்ஸ் உச்சி மாநாட்டில் பாரம்பரிய மற்றும் மரபுகளுக்கு ஊடகத் துறை மூலம் குரல் கொடுக்கவும், தவறான தகவல்கள் மற்றும் பொய்யான விளம்பரங்களை தவிர்த்து, ஊடகத் துறையின் நேர்மையை மேம்படுத்தவும் உறுப்பு நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

கோவா விபத்து 1(17)

கோவாவில் பிச்சோலிமில் உள்ள ஷிர்காவ் கிராமத்தில் நடைபெற்ற ஸ்ரீ லைராய் ஜத்ரா திருவிழாவில், இன்று காலை ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 6 பேர் உயிரிழந்தனர். 80 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பல நூற்றாண்டுகள் பழமையான இந்த கோவிலில் ஏற்பட்ட இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு மாபுசா மாவட்ட மருத்துவமனை மற்றும் கோவா மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள்ள பிச்சோலிம் சுகாதார மையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அம்மாநில முதலமைச்சர் டாக்டர் பிரமோத் சாவந்த் மப்புசா மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். இந்த விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தேவையான அனைத்து மருத்துவ ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு நோயாளியின் நிலையையும் அரசாங்கம் உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அம்மாநில முதலமைச்சர் கூறினார்.

இந்த விபத்து குறித்து குடியரசு தலைவர், பிரதமர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும்,

கோவா விபத்து 2 (4)

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாகவும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் இறைவனை வேண்டுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் (10)

பாகிஸ்தானில் இருந்து நேரடி மற்றும் மறைமுக இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. தேசிய பாதுகாப்பு மற்றும் பொது கொள்கையின் நலனுக்காக இந்த கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளதாக வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் அறிவித்துள்ளது. தொழில் மற்றும் வர்த்தக துறை சார்பில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை இது செயல்பாட்டில் இருக்கும் என்றும் இயக்குநரக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து பாகிஸ்தானுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நட்டா (7)

தேவாரம், திருவாசகம் பாடல்களை உலகிற்கு தந்த பெருமை தமிழகத்தை சேரும் என்று மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா தெரிவித்துள்ளார். சென்னை அருகே திருகைலாய தர்மாபுரம் ஆதினத்தில் நடைபெற்ற 6 வது சர்வதேச மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், சைவ சிந்தாந்தம் தொடர்பான செய்திகள் மனித குலத்தை மேம்படுத்தும் என்றும், தெய்வீக சக்தியை

போதித்து மனம் உருகும் பாடல்களை அப்பர், சுந்தரர், திருஞான சம்மந்தர் படைத்தது குறித்தும் பாராட்டினார்.

<u>*புதுச்சேரி முத்ரா கடன்* 1 (5)</u>

பிரதமரின் முத்ரா கடன் திட்டம் தொடங்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவு பெற்றதை ஒட்டி, புதுச்சேரி இந்தியன் வங்கி மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முத்ரா கடன் திட்ட பயனாளிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி புதுச்சேரி ராஜ்நிவாசில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பேசிய துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் .....நிகழ்ச்சியில கலந்து கொண்ட சில பயனாளர்களின் கருத்துக்கள்......

(வாய்ஸ்கைலாஷ்நாதன்)

<u>*புதுச்சேரி முத்ரா கடன்* **2 (5)**</u>

இந்நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநரின் செயலர் டாக்டர் மணிகண்டன், இந்தியன் வங்கி தலைமை மேலாளர் திரு அன்புகாமராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் முத்ரா கடன் திட்ட பயனாளிகள் கலந்து கொண்டு தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

<u>*புதுச்சேரி ஆலோசனை கூட்டம்* (14)</u>

புதுச்சேரியில் தொழில்துறை வளர்ச்சி குறித்த ஆலோசனை கூட்டம் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமையில் ராஜ்நிவாசில் இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், உள்துறை மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், துணை நிலை ஆளுநரின் செயலர் திரு மணிகண்டன், தொழில் வளர்ச்சித் துறை செயலர் திரு ருத்ரகவுடு மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். தொழில்துறை வளர்ச்சிக்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்த திரு கைலாஷ்நாதன், தொழில்துறை வளர்ச்சிக்கு ஏற்ற சாதகமான

சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றும், புதிய முதலீட்டாளர்களை கவரும் வகையிலான திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். தொழில்நுட்ப பூங்கா, ஜவுளிப்பூங்கா போன்ற தொழில்துறைகளை தொடங்க முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்றும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரிவுபடுத்தவும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

நீட் (16)

இளநிலை மருத்துவ படிப்புக்கு நடைபெறும் நீட் நுழைவுத் தேர்வு புதுச்சேரியில் நாளை நடைபெறுவதை ஒட்டி, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமையில், நேற்று ராஜ்பவனில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், நீட் தேர்வு மையங்களில் குடிநீர், போக்குவரத்து வசதி ஆகியவற்றை உரிய முறையில் செயல்படுத்த வேண்டும் என்றும், தேர்வு முடியும் வரை விரும்பதகாத நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க நுண் குற்றப்பிரிவினர் விழிப்போடு செயல்பட வேண்டும் என்றும் துணை நிலை ஆளுநர் வலியுறுத்தினார். இக்கூட்டத்தில் புதுச்சேரி தேர்வு பொறுப்பு அதிகாரி திரு பங்கஜ்குமார் ஜா, காவல் துறை தலைவர் திரு அசோக்குமார் சிங்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதனிடையே, புதுச்சேரி பேருந்து நிலையத்தில் இருந்து தேர்வு மையங்களுக்கு மாணவர்கள் செல்ல வசதியாக சிறப்பு பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பிஆர்டிசி மேலாண் இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில், தாகூர் கலை கல்லூரி, பாரதிதாசன் மகளிர் கல்லூரி உள்ளிட்ட 8 மையங்களில் நீட் தேர்வு நடைபெற உள்ளது.

***பத்திரிக்கை சுதந்திர தி□ம் (6)***

பத்திரிக்கை சுதந்திர தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. பத்திரிக்கை சுதந்திரம் மற்றும் ஊடகத் துறையில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மற்றும் தைரியமாக செய்திகளை வெளியிடுவது என்ற இந்த ஆண்டின் கருப்பொருளுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மக்கள் தொடர்பு மற்றும் உரிமைகளை பாதுகாப்பதில் பத்திரிக்கைகளின் பங்கை எடுத்துரைக்கும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

***பால புரஸ்கார் (13)***

பிரதமரின் தேசிய சிறார் விருதுக்கு ஜூலை 31 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. 5 முதல் 18 வயதிற்கு உட்பட்ட தகுதி வாய்ந்தவர்கள் தேசிய விருதுகளுக்கான இணையதளத்தில் இதற்கான பரிந்துரைகளை சமர்பிக்கலாம் என்று மத்திய அரசு செய்திக்குறிப்பில் அறிவித்துள்ளது. துணிச்சல், சமூக சேவை, சுற்றுச்சூழல், விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பிரிவுகளில் சிறந்து விளங்கிய குழந்தைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. அனைத்து பரிந்துரைகளும் awards.gov.in என்ற அதிகாரப்பூர்வ ராஷ்டிரிய புரஸ்கார் போர்ட்டல் மூலம் சமர்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால் புரஸ்கார் விருது என்பது நாடு முழுவதும் உள்ள குழந்தைகளின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் குடியரசு தலைவரால் ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு உயரிய தேசிய அளவிலான விருது என்பது குறிப்பிடத் தக்கது.

விளையாட்டு (9)

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில், ராயல்ஸ் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியும்- சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் களம் காண்கின்றன.

உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி சைப்ரசின் நிக்கோசியா-வில் இன்று தொடங்குகிறது. 54 நாடுகளை சேர்ந்த 350 க்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் இப்போட்டிகளில் இந்தியாவின் சார்பில் அபேசிங் செகான், ரித்துராக் சிங் உட்பட 12 பேர் பங்கேற்க உள்ளனர்.

லக்ஸம்பர்க் ஓபன் பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் மேதவி நாகர், அலிஷா மாலிக் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறி உள்ளனர்.